# பழிச்சொல்

பேச்சுக் குரல் கேட்டு வாசற்புறம் எட்டிப் பார்த்தாள் தர்மாம்பாள். அவள் கணவர் ஒரு சிறுமியுடன் பேசிக்கொண்டிருந்தார். நேற்று அழைத்தபொழுது ஓட்டமாக ஓடிவிட்ட சிறுமியா இன்று திண்ணையில் வந்திருக்கிறாள்? தர்மாம்பாள் ஆவலோடு வாசற்பக்கம் விரைந்தாள். தர்மாம்பாளைக் கண்டு வெட்கமுடன் பின்னால் நகர்ந்தாள் அந்தப் பெண்.

"அட! போக்கிரி! எங்கே ஓடப் பார்க்கிறாய்?" எனச் செல்லமாக அதட்டினாள் தர்மாம்பாள். அந்தச் சிறுமியை இழுத்தார் சர்மா.

"ஏன் இந்த வெட்கம்? உன் பேர் என்ன? சொல்லு!" என்று குழைவுடன் வினவினாள் தர்மாம்பாள்.

இன்பப் புன்னகை புரிந்தவாறே, ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே அந்த ஆறு வயதுச் சிறுமி, "நந்தினி" என பதிலளித்தார் சர்மா. "நந்தி - நீ இல்லையேம்மா? என்று கேட்டுச் சிரித்தார்.

விகடம் என்ற நினைப்பிலே அவர் அவ்வாறு கேட்டால், குழந்தைக்கு என்ன தெரியும்?

"போதுமே, தத்துப் பித்துன்னு! பாவம்! அதுக்கென்ன புரியும்! முழிக்கிறது! வாம்மா! என்னோடே உள்ளே வா! அப்புச்சி தரேன்!" என்று தர்மாம்பாள் நந்தினியின் கையைப் பற்றினாள்.

"எனக்கு அப்புச்சி வேண்டாம்! நான் பட்சணம் தான் தின்பேன்!' என்று அழுத்தமும் திருத்தமுமாக நந்தினி பதில் கொடுத்தாள்!.

தம்பதிகள் சற்று திகைத்தாற்போல பார்த்துக் கொண்டார்கள். மறுகணம் தர்மாம்பாள் முகத்திலே மகிழ்ச்சி முறுவல் தோன்றியது. சர்மா குரல் விட்டு சிரித்தார்.

"நான் பேசினது சரியா, நீ பேசினது சரியா, பார்! அவளைப் பாப்பாவாக்கி நீ பேசினது சரியில்லைன்னு அவளே சொல்றாள், கேட்டுக்கோ!' என்றார் சர்மா மனைவியிடம்.

"நீங்கள் பேசினதை அது பாவம் புரிஞ்சுண்டால்தானே சண்டைக்கு வரும்? நாம் இரண்டு பேரு சொன்னதும் தப்பு! நந்தினிக்கண்ணு சொல்றதுதான் ரைட்டு! இல்லையாம்மா?' குழந்தையின் தலையை வருடி தர்மாம்பாள் நந்தினியை வீட்டுக்குள்ளே அழைத்துப் போனாள்.

நந்தினியும் அவ்விருவரின் ஆசையையும் உணர்ந்தவளாய் உள்ளே போனாள்; ஊஞ்சலிலில் உட்கார்ந்தாள். தர்மாம்பாள் கொணர்ந்து வைத்த பட்சணத்தை தின்னலானாள். ராமசர்மா வந்தார். ஆனந்தக் காட்சியைக் கண்ட உவகையோடு, "நேற்று ஓடிவிட்டாளே, போக்கிரி! இன்று எதற்காக வந்தாள் கேளு!" என்றார் மனைவியிடம்.

தர்மாம்பாள் சிரித்தவாறே, "சொல்லும்மா மாமிக்கு?" என்று வினவினாள். உடனே சோடாகுப்பி உடைந்தாற்போல பதில் வந்தது! "மாமா பெரிய பொம்மை தரேன்னா!" என்றாள்!

கணவனும் மனைவியும் மகிழ்ச்சிச் சிரிப்புச் சிரித்தனர். சிறுமியின் பேச்சிலே அவர்கள் இன்பமும் வசீகரமும் கண்டனர்.

"ஏன்னா? தரேன்னுட்டு ஏமாத்திவிட்டேளா குழந்தையை?' என்று தர்மாம்பாள் கேட்டாள். சிரிப்பை மறைத்துக்கொண்டு.

"ஏமாற்றுவேனா போக்கிரியை!" என்று அர்த்தம் தெரியாமலேயே பேசிக்கொண்டு அடுத்த அறையுள் நுழைந்தார் சர்மா.

அங்கே அலமாரியிலே பல சிறு பொம்மைகளின் நடுவே, ஒரு அழகிய குழந்தைப் பொம்மை, நேர்த்தியான உடை அணிந்து நின்றிருந்தது. அதை எடுத்தார் சர்மா அந்தப்

பொம்மையை அவர் ஏந்தி வருவதைக் கண்டு நந்தினியின் கண்களிலே மின்னல்கள் மின்னின.

ஓட்டமாக ஓடி, சர்மாவருகு வந்தாள். பொம்மையை அவளிடம் கொடுத்தார் அவர்.

"இதைத்தான் சொன்னேளா?" என்று தர்மாம்பாள் உற்சாகமிழந்தவளாய்க் கேட்டாள்.

"ஆமாம்," என்றார் அவர்.

நந்தினி பொம்மையின்பாலே ஈடுபட்டுவிட்டதனாலேபோலும், தர்மாம்பாள் தன் எண்ணத்தை வெளியிடத் தயங்கவில்லை.

"எத்தனை வருஷமாய் இதைக் காப்பாற்றி வருகிறோமே, குழந்தைக்கு ஈடாய்! அதை கொடுத்தூடறதான்னு தான் பார்த்தேன்! இல்லாவிட்டால் இந்தக் குழந்தைக்குத் தர எனக்குக் கசப்பா?' என்றாள் அவள்.

ஒரே கணம் யோசிப்பவர்போல தோற்றமளித்தார் சர்மா. பிறகு தம் மனைவியை சமாதானம் செய்ய "இதைக் கொடுத்தோமானால் அப்புறம் நந்தினி ஆசையாய் அடிக்கடி நம்மாத்துக்கு வருவாளே! பொம்மை வெறுமனே இருக்கிறதைவிட இந்தக் குழந்தை தினமும் வந்து சற்று நேரம் விளையாடி விட்டுப் போகிறது தேவலை இல்லையா? என்றார்.

"ஆமாம், அதற்கு நான் ஒரு யோசனை சொல்றேன்! நந்தினிக்கு நம்மகத்திலே ஒட்டுதல் ஏற்படுகிற வரைக்கும் பொம்மை இங்கே இருக்கட்டும்! பொம்மைக்காக வேனும் அடிக்கடி வருவாள்! அப்புறம் அவளுக்கே கொடுக்கலாம்!" என்றாள் தர்மாம்பாள்.

சர்மாவால் இந்த யோசனையை மறுக்க இயலவில்லை பொம்மைமேலேயே கருத்தாயிருந்த நந்தினியருகே போய்க் குனிந்து, "நந்தினி, தினமும் வா! பொம்மையோடு நீ விளையாடலாம்!" என்று சொன்னார்.

"நேக்குத் தரேன்னையே!" என்று கேட்டாள் அவள், ஆணித்தரமாக!

இந்த ஆணிதான் தேவையாயிருந்தது தம்பதிகளின் யோசனைகளைக் கட்டுப்படுத்த!

மனைவியின் முகத்தைப் பார்த்தார் சர்மா குழந்தையின் முகத்தைக் கவனித்தாள் தர்மு.

"சரி எடுத்துக்கோம்மா! நீ தினமும் எங்காத்துக்கு வந்து ஊஞ்சலாடணும்! பூஜை பார்க்கணும்! பிரசாதம் தின்கணும்! தெரிஞ்சுதோ?" என்று உற்சாகமுடன் கூறிவிட்டாள் தர்மாம்பாள்.

குழந்தை பொம்மையைத் தூக்கிக் கொண்டு குதித்தோடிவிட்டது!

குழந்தைக்குப் பொம்மையைக் கொடுத்ததிலே தர்மாம்பாளுக்குத் திருப்திதான், குழந்தைப் பேறு அற்ற அவள், அக்கம் பக்கத்துச் சிறுவர் சிறுமியர்க்கு, கைகூசாது மனங்கூசாது, தின்பண்டங்களும் விளையாட்டுப் பொருட்களும் கொடுத்து மகிழ்ந்திருக்கிறாள். ஆனால் இதுநாள் வரை அந்தப் பெரிய ஸெலூலாய்ட் பொம்மையை மட்டும் யாருக்கும் கொடுக்கும் எண்ணம் அவளுக்கு இருக்கவில்லை கடந்த பதினைந்தாண்டுகளாய், அந்தப் பொம்மையிலேயே குழந்தையைப் பார்க்கும் ஆறுதலடைந்திருக்கிறாள்.

அதற்கு பெண் உடுப்பும் ஆண் உடுப்பும் தினுசு தினுசாக அணிவித்து அதைப் போற்றிவந்திருக்கிறாள். அதனால்தான் அதைப் பிரியக் கூசினாள் முதலிலே ஆனால் இந்தச் சிறுமி நந்தினி அந்தப் பொம்மைக்குரியவளாகக்கூடிய அத்தனை கவர்ச்சியும் வசீகரமும் கொண்டுவிட்டாள்! தர்மாம்பாள் பொம்மையைப் பிரிந்ததற்கு வருத்தப்படவில்லை. அந்தச் சிறுமி நந்தினி தினமும் தங்களை நாடி வந்து மழலை மொழிந்து விளையாடினால் தனக்கு மனநிறைவு ஏற்பட்டுவிடும் என்றும், நந்தினி வருவாள் என்றும்தான் அவள் யோசனை செய்தாள், மொம்மை போன பிறகு.

அன்று மாலை நந்தினி கையிலே பொம்மையுடன் வருவதைக் கண்டதும் மகிழ்ந்தாள். அவள் தன் தாயுடனே வருகிறாள் என்பதை விரைவிலே கண்டாள். நந்தினியும் அவள்

குடும்பமும் ஊருக்குப் புதிது; ஆதலால் நேரிடைப் பழக்கம் இல்லை. ஆனால் நந்தினியின் தாய் அவன் என்பதை தர்மாம்பாள் முன்பே கவனித்திருக்கிறாள்.

நந்தினியின் அன்னை ஜானகி, உரிமையோடு படியேறிவந்தாள். "இத்தனை பெரிய பொம்மையைத் தூக்கிக் கொடுத்துவிட்டேளே மாமி. இந்த நாளிலே இது கிடைக்கிறதே கஷ்டமாச்சே! உங்காத்துக் குழந்தைகள் ஆசைப்படாதோ?" என்று கேட்டாள் வந்தவுடனே.

தர்மாம்பாளின் முகத்திலே சோகத்திரையினூடே பெருந்தன்மை ஒளிர்ந்தது. 'இங்கே குழந்தைகள் யாருமில்லைம்மா! கொடுத்தோம், வச்சுக்கட்டும்! தினம் ஒரு தடவை நந்தினியை அனுப்பி வையுங்கள். எங்களுக்குச் சந்தோஷமாய் இருக்கும்!" என்று கூறினாள் தர்மாம்பாள்.

நந்தினியின் அன்னை ஜானகி, தர்மாம்பாளை கனிவோடு நோக்கினாள். பிறகு பேச்சுப் போக்கிலே, தர்மாம்பாள் குழந்தைகளைப் பெற்று இழந்தவள் அல்லள் என்பதையும், வயிறு திறவாத அபாக்கியவதி என்றும் அறிந்து பரிதாபப்பட்டாள் சொந்தக் குழந்தைகள் இல்லாததாலே பிற மக்களையும் கரிக்கும் சிலரைப்போலன்றி பிறமக்களிடம் அன்பை பொழியும் தர்மாம்பாளின் இயல்பு கண்டு மதிப்புக்கொண்டாள்.

கொண்டாடுமிடத்திலே அண்டும் குழந்தை நந்தினியை யார் தூண்ட வேண்டும்? அவள் அவள் போக்கிலே, அவள் இச்சைப்படியே சர்மா தம்பதிகளிடம் வருவாள்; சில சமயங்களிலே தன் உடன் பிறந்தவரோடும் அக்கம் பக்கக் குழந்தைகளோடும் வருவாள். பல சமயம் அவள் மட்டும்தான் வருவாள், வீட்டிலே அழும்பு செய்யும் பொழுதும் "மாமி கிட்டப் போறேன் போ!" என்று கூறி ஓடி வந்து விடுவாள். இங்கேயே சாப்பிடுவாள்; ஊஞ்சற் பலகையிலே உறங்கி விடுவாள். புதுச்சட்டை அணிந்து பூரித்திருக்கும்பொழுதும் 'மாமி மாமாக்குக் காட்ட' வந்துவிடுவாள். இரு குடும்பங்களையும் வெளித்தோற்றம் நாலு வீடுகளோடு பிரித்தாலும், உறவிலே இரண்டு குடும்பங்களும் ஒன்றே போலப் பழகின.

பல குழந்தைகள் வந்து போனாலும் ஆறு வயது நந்தினிதான் அவன் வயசுக்குரிய சாலக்கு சொல்லாலும், அன்பு மனத்தாலும் சர்மா தம்பதிகளின் வறண்ட வாழ்விலே இன்ப ஊற்றுப் போலானாள்.

நவராத்திரி வந்தபொழுது, ஜானகியே தர்மாம்பாளை அணுகி, வீட்டிலே சில அசௌகரியங்கள் கொலு வைப்பதற்கு இடைஞ்சல் செய்வதாயும், நந்தினி ஆசைப்படுவதால் இவர்கள் வீட்டிலே கொலுவை வைக்கலாமா என்றும் கேட்டாள். எல்லையில்லா மகிழ்ச்சியுடனே அனுமதி வழங்கிவிட்டாள் தர்மாம்பாள்.

தன் வீட்டிலும் நவராத்திரிக் கோலாஹலம், குழந்தைகளோடும், பொம்மைகளோடும் நடக்கிறது என்ற பெருமிதமோ, அல்லது, நந்தினிக்கு அளிக்கப்பட்ட முதற் செலுலாய்ட் பொம்மையிலே மூக்கு நசுங்கியிருந்ததைக் கண்டு, "மூக்கைப் போய் நசுக்கி வச்சிருக்கயே - ஏண்டிம்மா?' என்று நந்தினியைக் கோபித்துக் கேட்டதற்குப் பரிகாரமோ - தர்மாம்பாள் நந்தினிக்குப் பரிசாக வாங்கின பொம்மைகள், அவளுடைய பழைய பொம்மைகளைவிட இரண்டு பங்கு இருந்தது! தீபாவளி வந்தபொழுது பெட்டி பெட்டியாகக் கட்டுக்கட்டாக வாணமும் பட்டாசும் வழங்கப்பட்டன!

இரண்டு நாள் வெளியூர் கோயில் திருவிழாவையொட்டி சர்மாவும் தர்மாம்பாளும் சென்றுவிட்டபொழுது நந்தினி 'எப்போ வருவா?' என்று கேட்டு நச்சரித்ததைக்கண்டு, அவள் பெற்றோர் வியப்புற்றனர்; சர்மா தம்பதிகள் அதை அறிந்தபொழுது வியப்போடு பெருமையும் உவகையும் எய்தினர்.

கோடையோடே வரும் திருமண மாதங்களைப் போலவே, அந்தத் திருமணக் கடிதமும் வந்தது. "ஸ்டாம்பு ஒட்ட மறந்துபோய் நாலணா தண்டம் வச்சாங்களா?" என்று தபாற்காரன் சிரித்தாலும், சர்மா, "தண்டமா?........ பாவம் மரியாதை பண்ணி கைக்கடிதம் எழுதி ஒத்தாசைக்கும் அழைச்சிருக்காங்க! கலியாணச்சந்தடியிலே வெற்றுக் கவர்லே போட்டு,

ஸ்டாம்பு ஒட்ட மறந்துட்டாங்க! அதனால் என்ன? நாங்கள் போய் ஆசீர்வாதம் பண்ணிட்டுத்தான் வரப்போறோம்!" என்றார் சர்மா!

'கோடியாத்து ஐயர் இந்த மாதிரி கடிதம் வந்ததும் இங்கிருந்தே நல்லா ஆசீர்வாதம் பண்ணுவாரு!" என்று தபாற்காரன் மீண்டும் சிரித்தபொழுது "அவர்கள் சம்சாரி - பணக்குறி!.... எங்களுக்கென்னப்பா!" என்றார் சர்மா. அந்தச் சமயம் நந்தினி ஓடிவரவே, 'நந்தினி! வரயா ஷோக்கா, கலியாணத்துக்கு?" என்று கேட்டவாறே உள்ளே சென்றார்.

கடிதத்தை மனைவியிடம் கொடுத்துவிட்டு, "எப்பொழுது புறப்படலாம்?" என்று கேட்டார். திருமணம் சர்மாவின் அண்ணாவின் மைத்துனன் பெண்ணுக்கு எனினும் நன்றாக பழக்கமானவர்கள்.

"எட்டு நாள் முந்தியே வந்து கலியாண ஒத்தாசை பண்ணனும்னு முதலிலேயே அவள், பாவம், சொன்னாள் - உங்கள் மன்னியின் மன்னி! உங்கள் மன்னி, நாத்தனாராய் லக்ஷ்ணமாய் உட்கார்ந்திருப்பாள்; நானாவது போய் ஒத்தாசை பண்ணத்தான் போறேன்!" என்றாள் தர்மாம்பாள்.

"என் மன்னியின் ஓரகத்தியாச்சே நீ! நீ மட்டும் காரியம் செய்வானேன்?" என்று கூறிச் சிரித்தார் சர்மா.

"ஓரக்கத்தியாயிருந்தால்? ஓராத்துலே இருக்கோமா? ஒரே மாதிரிதான் இருக்கோமோ? உங்கள் மன்னிக்கு நேர் எதிர் ஆச்சே நான்?' என்றாள் தர்மாம்பாள் - அடுப்பிலே ஏதோ செய்த வண்ணம். சர்மாவை நேருக்கு நேர் பார்த்துப் பேசவில்லை அவள்.

அவளுடைய ஓரகத்திக்கு நிறைய குழந்தைகள். ஒரு சமயம் ஒரு பையனை படிக்க இங்கே விட்டு வைக்கும்படி சர்மா தம்பதிகள் கேட்டதற்கு, அந்தத் தாயிடமிருந்து ஓர் தினுசான மறுமொழி வந்தது.

'தத்துக் கேட்டோமா?" கொடுத்துவிடச் சொன்னோமா? இது சொன்னது தவறா?' என்று அன்று மனவருத்தம் கொண்ட தர்மாம்பாளுக்கு இன்னும் நெஞ்சு ஆறவில்லை என்பதை சர்மா உணர்ந்தார்.

பேச்சை மாற்ற எண்ணி சர்மா பலாச்சுளை தின்று கொண்டிருந்த நந்தினியை நோக்கி, "என்ன, இவள் கூட வரப்போகிறாளாமே நம்மோடு!" என்றார்.

தர்மாம்பாளின் மனத்திலே ஒரு எழுச்சி உண்டாயிற்று. "நிஜமாகவே நந்தினி வந்தால்? அவளை அழைத்துப் போனால் என்ன?" என்று ஆசை வால்நட்சத்திரம் போலக் கிளம்பியது. இதுவரை அவள் அறியாத ஓர் அனுபவம் - தன்னோடு ஒரு குழந்தையை வெளியூர் அழைத்துச் செல்வது! தர்மாம்பாளின் எண்ணத்திற்குக் குஞ்சலங் கட்டினாற்போல நந்தினி, "எங்கே மாமா? நானும் வரேன் மாமா!" என்று துள்ளி எழுந்தாள்.

குழந்தையின் ஆர்வத்தையும் கண்டனர் அவ்விருவரும்.

"நிஜமாகத்தான், தர்மு! நந்தினியை அழைத்துக்கொண்டு போவோம்! பத்துப் பன்னிரண்டு நாள் அவளைப் பார்க்காமல் நாம் இருக்க முடியுமா?" என்று மனைவியிடம் கூறிவிட்டு சர்மா, "நந்தினி, போ, சொல்லு அப்பா கிட்ட!" என்றார். நந்தினி ஓடப் பார்த்தாள்.

ஆனால் தர்மாம்பாள் தடுத்தாள். "நாம் சொல்லிவிட்டால் ஆச்சா? அவாளுக்குமட்டும் குழந்தையைப் பத்துநாள் விட்டு இருக்கத் தோணுமா? அனுப்புவாளா?" என்றாள்.

"அனுப்பாட்டாலும் நான் வருவேன்!" என்றாள் நந்தினி நறுக்குத் தெறித்தாற்போல்.

தர்மாம்பாள் லேசாகச் சிரித்தாள்.

"நீயும் வந்தால் எங்களுக்கு நன்றாய்த்தான் இருக்கும்! சரி, ஆத்துக்குப் போய் வரயா? நான் சாயங்காலம் உங்கம்மாகிட்ட சொல்லி அழைச்சுண்டு போறேன்!" என்று கூறினாள் நந்தினியிடம்.

"ஓ சொல்றேன்!" என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டாள் நந்தினி.

"பள்ளிக்கூடம் பாடம் போகுமே!" என்றார் சர்மா. "லீவு போலிருக்கே நாளையிலிருந்து!" என்றாள் தர்மாம்பாள். வீட்டுக் குழந்தைகள் இருந்தாலல்லவா, ஆரம்ப பாடசாலை பற்றி தெரியும் அவர்களுக்கு? நந்தினியை திருமணத்திற்கு அழைத்துப் போக வேண்டும் என்னும் விருப்பம் இப்பொழுது தர்மாம்பாளுக்குத் தீவிரமாக இருந்தது குழந்தையுடன் தான் அங்கேபோய் இறங்குவதைக் கற்பனை செய்தாள்; படிக்கக்கூட பிள்ளையை விட்டுவைக்காத தன் ஓரக்கத்தியும் அங்கே இருப்பாள்; இப்பொழுது வளர்ப்புப் பெண்போலுள்ள நந்தினியை அவர்கள் கண்டு, தன்னை அன்று அலட்சியம் செய்ததை உணர வேண்டும் - என்றும் ஓர் ஆசை தர்மாம்பாளின் நெஞ்சிலே இருந்தது. பத்துநாள் நந்தினியைப் பிரிந்திருக்கத் தேவையில்லை என்ற ஆறுதலும் உண்டாயிற்று. ஜானகி மகளை அனுப்புவாள் என்ற நம்பிக்கையிருந்தாலும், ஒரு தடவை போய் கேட்கவேண்டியதுதான் எஞ்சிய வேலை,

தர்மாம்பாள் ஜானகியை பார்க்கக் கிளம்பு முன்பு, ஜானகியே பெண்ணுடன் வந்துவிட்டாள்.

'மாமி! என் குட்டிப்பெட்டியிலே என் சட்டை பாவாடை எல்லாம் வச்சூட்டேன்!" எனக் கூவியவாறே வந்தாள் நந்தினி.

"என்ன, மாமி! என்னமோ சொல்றதே இந்தப் பெண்? நிஜமா? துணி மணியெல்லாம் எடுத்து வச்சுக்கறதே!" என்று வினவியவாறு வந்தாள் ஜானகி.

தர்மாம்பாள் சொன்னாள் விபரம். ஜானகி தடை கூறவில்லை நந்தினியை அனுப்ப இசைந்தாள். அடுத்த வாரம் சர்மா தம்பதிகள், நந்தினியையும் அழைத்துக்கொண்டு பயணமானார்கள் நந்தினிக்கும் உற்சாகமாய், உல்லாசமாய், இருந்தது. சர்மாவும் தர்முவும்கூட புதுமையும் பெருமையும் உணர்ந்தார்கள்.

திருமண இல்லத்திலே, நந்தினி, பர்வத நந்தினியாய் அறிமுகம் செய்விக்கப்பட்டாள். ஏனையோரும் அவளைச் 'சமர்த்து' என்றும் 'சூட்டிக்கை' என்றும், 'அழகு' என்றும் பாராட்டினார் ஒரு ஆசாமி. தம் கைக் கடிகாரம் பத்திரமாயிருக்க வேண்டி அவள் கையிலே கட்டிவிட்டு குளிக்கப்போனார்! தர்மாம்பாளின் ஓரகத்திகூட, அபிமானமாயிருந்தாள். "பெண் குழந்தையாச்சே, அதான் உன்னண்டையே வேணாலும் விட்டுவைப்பார்கள்! கலியாணங்கார்த்தி பண்ணி வச்சாலும் தாராளமாய்ச் சந்தோஷப்படுவார்கள்!" என்று சிரித்துப் பேசி தர்மாம்பாளை இறக்கப்பார்த்தாளே தவிர, அந்தக் குழந்தை நந்தினிமேல் அவளுக்குக் கோபம் இல்லை.

திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னதாக வந்ததால் தர்மாம்பாள் பெறுப்புடன் கலியாணக் காரியங்களிலே முனைந்திருப்பினும் நந்தினியையும் கவனித்தாள். சர்மா நந்தினியின் மேலே கருத்தாயிருந்தார். ஆனால் வந்த நான்காம்நாள் நந்தினிக்குச் சுரங்கண்டதை மட்டும் எவராலும் தடுக்க இயலவில்லை. கவலையே உருவான தம்பதிகளும் மற்றபேரும் கலியாணத்திற்கு முதல்நாள், சுரம் விட்டதைக் கண்டு ஆறுதலுற்றனர். கலியாணத்தன்றும் சுரம் இல்லை. அன்று சாப்பிட அமர்ந்த தர்மாம்பாள், 'குழந்தைக்கு இன்னும் பத்தியச் சாப்பாடு கூட போடவில்லை! நமக்கு விருந்து!' என்று எண்ணமிட்டவாறேதான் சாப்பிட்டாள். கை கழுவும் சமயம் ஒரு பையன் ஓடோடி வந்தான்.

தன்னுணர்வு அற்றவளாய் நந்தினி விழுந்து கிடப்பதாகச் சொன்னான். கம்பமாய் நின்றாள் தர்மாம்பாள்.

"எத்தனை நாழியாய்?" என்று யாரோ அருகில் கேட்டார்கள். "பத்து நிமிஷமாச்சு! எழுந்துடுவாளாக்கும்னு பார்த்தோம்! எழுந்திருக்கவில்லை!" என்றான் சிறுவன்.

'ஏண்டாப்பா அப்பவே சொல்லல்லை?" என்று கேட்டுக்கொண்டே பதறி ஓடினாள் தர்மாம்பாள்.

சுரம் வந்தது முதலே அடுத்த வீட்டிலேதான் ஒரு சிறு அறையிலே நந்தினிக்கு இடம் ஏற்படுத்தப்பட்டது. அங்கே ஓடினாள் தர்மாம்பாள். படுத்திருந்த பெஞ்சினின்றும் உருண்டிருக்கிறாள் என்றும், சுரம் விட்டுச் சோர்வு மேலிட்ட நிலையிலே விழுந்த அதிர்ச்சி

இப்படி நினைவிழந்திருக்கிறாள் என்றும், டாக்டர் வந்துவிடுவார் என்றும் ஆறுதல் கூறினார் அருகிருந்த சிலர்.

டாக்டர் வந்தார், சர்மாவும் வந்து சேர்ந்தார். அன்று முழுதும் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும் என்றும், ஆபத்து இல்லை என்றும் கூறிச் சென்றார் டாக்டர். நந்தினியின் பெற்றோருக்கு தெரிவிப்பதா வேண்டாமா என்று குழப்பம் சர்மாவுக்கு; மறுநாள் நிலைமை தெளிவுற்றதும் எழுத நிச்சயம் செய்தார். மறுநாள் சுரம் தணியவே, நாலு நாளில் ஊருக்குப் போய்விடலாம் என்றும் புறப்படும் முதல் நாள் எழுதலாம் என்றும் தள்ளிப் போட்டார். ஆனால் மூன்றாம் நாள் மீண்டும் சுரங்கண்டது. மறுநாள்-மறுநாள்-குறையவில்லை;சுரம் ஊர் திரும்ப முன்பு போட்டிருந்த முதல் திட்டத்தின் வரையறை தாண்டிவிட்டது.

குழந்தைக்குச் சுரம் என்றும், குறைந்ததும் புறப்பட்டு வருகிறதாகவும் எழுதினார் சர்மா; கவலை வேண்டாம் என்றும் தைரியங் கூறினார், தம்முடைய அதைரியத்தை மூடியிட்டுவிட்டு.

இன்னும் இரண்டு நாள் கழிந்ததும் முத்துமுத்தாகக் கொப்புளங்கள் - நந்தினியின் உடல் முழுதும் அன்னை பராசக்தி நந்தினியுடன் விளையாட வந்தாள். அந்தப் பயங்கர விளையாடலைக் கண்டு கதிகலங்கித் தவியாய் தவித்தனர் சர்மாவும் தர்முவும். அயலூர்-அயல் வீடு-அயலார் குழந்தை!.... ஆம்! அயலார் குழந்தைதான் அவள் என்பதை இப்பொழுது நிலைமை இடித்துக்காட்டி ஏசியது!

நிலைமை முற்றிவிடவே, நந்தினியின் தந்தைக்கு அவசரத் தகவல் விடுத்தார் சர்மா. அவர்கள் மறுநாளே புறப்பட்டு வந்தனர். "முதலிலேயே தெரிவிக்கவில்லையே, சரியா!" என்னும் குற்றச்சாட்டுடனே வந்த அவர்களுக்கு விடை பகர இயலாமல் தலை கவிழ்ந்தனர் இருவரும். சர்மா அள்ளி அள்ளிக் கொடுத்து பணத்தைச் செலவு செய்தார்; எனினும் நந்தினியின் கண்களிலே ஒன்று ஒளி இழந்துவிட்டது.

திருமணத்தன்று விருந்துச்சாப்பாடு நடந்து கொண்டிருந்த சமயம் நந்தினி நினைவிழந்து கிடந்ததையும் சொல்லிக் கண்ணீர்விட்டாள் தர்மாம்பாள்.

"சொல்லிக்கொள்கிறாளே!..... கூச்சமில்லாமல்! பெற்றவயிறானால் அங்கே குழந்தை அப்படிக் கிடக்கும்பொழுது இங்கே சாப்பாடு வேண்டியிருக்குமா? இலையைப் பார்க்கத் தோணுமா? எனக்கு அங்கேயே என்னமோ வேதனை பிடுங்கியதே!" என்று ஜானகியும் கண்ணீர் சொரிந்தாள்.

"அப்படியா? அப்படியும் இருக்குமா?" என்று மலைப்புத்தட்டிப் போய் மந்தமதியானாள் தர்மாம்பாள். அழகுப் பிம்பமாகத் திருமண வீடு வந்த நந்தினி, அதை விட்டுப் புறப்படும்பொழுது உருமாறிவிட்டாள். உள்ளமும் மாறிவிட்டாள் போலும்! ஒரு தடவை அவள் "மாமி எங்கே!" என்று தாயைக் கேட்டபொழுது, "மாமியையுங் காணோம் கீமியையும் காணோம்! இத்தனை ஆனது போறல்லையா உனக்கு?" என்று தாய்மொழிந்ததற்கு மாமிக்கு இதமாக ஒரு சொல்கூட அவள் வாயிலிருந்து வரவில்லை!

தர்மாம்பாளும் சர்மாவும் அன்றே வேறு ரயிலிலே புறப்பட்டு வந்தனர். தர்மாம்பாள் உள்ளம் இடிந்து போனாள். முன்னமேயே வெளியுலகிலே தலை நிமிர்ந்து நில்லாத அவள், இப்பொழுது தலையைக் குனிந்து கொண்டு கூட வெளியே வரக் கூசினாள். முன்னம் சனி பகவான் பிள்ளையாரைப் பார்க்க அஞ்சினாற்போல் தர்மாம்பாள் குழந்தைகளைப் பார்க்க அஞ்சினாள். பெரியவர்களைப் பார்க்க வெருவினாள்.

நந்தினி கூட - தாய் சொல்லுக்குப் பணிந்துதான் போலும் - சர்மா வீடு வருவதில்லை.

"போனாயோ, காலை முறித்துவிடுவேன்", என்று அவள் அம்மா சொல்லியிருப்பாள்! கடவுள் அவளுடைய ஒரு கண்ணை இழக்க வைத்தாலும் நாம் இருவரும்தான் குற்றவாளி! ஆனால் அவர்களே எத்தனை நையப் புடைத்து மூளையைச் சிதறடித்தாலும், அவர்கள் பெற்றவர்கள்!" என்று வேதனைச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே சொன்னார் சர்மா.

நந்தினிக்குச் சுரம் வந்ததற்கும், அம்மை கண்டதற்கும், ஒரு கண் போனதற்கும் இவர்கள் பொறுப்பாளிகளா? மனிதர்கள் இதுபோன்ற விஷயங்களுக்குப் பொறுப்பாளிகள் என்றால் அவர்களால் அவற்றைத் தவிர்க்கவும் இயலுமே?

குற்றம் இவர்களுடையதா? அப்படியே இருக்கட்டும்! அதற்காக, தர்மாம்பாள் மனமிடிவானேன்? சர்மா அல்லவோ, நந்தினியை அழைத்துச் செல்லும் யோசனையைக் கிளப்பினார்?

தர்மாம்பாள் பெண்; வயிற்றைத் திறவாத குற்றமுடைய பெண், தாய்மையுள்ளம் மட்டும் படைத்துவிட்டவளாய் குழந்தையிடம் அன்பைப் பொழிந்த பெண். பெண்பிறவியின் பயனைக் காணாமற்போன பெண். ஒரு நாள் நந்தினியின் அண்ணன் செல்லுலாய்ட் பொம்மையை வைத்துவிட்டு ஓடிவிட்டான். 'அதன் மூக்கு நசுக்கினதற்கே அருமை நந்தினியை அதட்டினேனே! இப்பொழுது நந்தினியின் கண் போனதற்கு? . . .

இந்த நினைப்பிலே, தர்மாம்பாள் குற்றமெல்லாம் தனதே தவறெல்லாம் தனதே, பிழையனைத்தும் தனதே, என உள்ளங் குமுறி அணுவணுமாக உயிரிழந்து வந்தாள்.

நந்தினியோடு தொடர்பு ஏற்படும் முன்பு, வாழ்விலே ஊனங்கண்டு ஒளியிழந்திருந்தாள் அவள். நந்தினியுடன் தொடர்பு அறுபட்டபொழுது உள்ளத்திலும் ஊனங்கண்டு ஒளியற்றுப் போனாள்.

அவள் நந்தினியைக் கன்னிப் பெண்ணாகக் கற்பனை செய்து பார்த்தாள்:

கலியாணமாகாத நிலையிலே, நந்தினி பலரின் ஏச்சுக்கு இலக்காகி நிற்கிறாள்; தர்மாம்பாளை, அவள்கூட மனமார, வாயாரக் தூற்றுகிறாள் - அந்தக் காட்சியிலே!

"மறுமையிலும் ஒளி இல்லை! ஊனம்தான்!" என்று உள்ளம் சரிந்துபோய் உடலைச் சாய்த்தாள் தர்மாம்பாள்.

ஆனால் அவள் அடைந்தது வானுலகம் தானோ?

சர்மா தம் உடமைகளையும் பொருளையும் நந்தினியின் பெயரிலே போட்டார். ஆனால் தம் மனைவிக்கும் தமக்கும் வந்துவிட்ட பழிச்சொல் மட்டும் இமயம்போல அழிவற்றிருப்பதை உணர்ந்தார்.

அன்புசெய்து இவர்கள் இருவரும் நந்தினியின் இரு கண்களிலே ஒன்றைப் பறித்தால், வன்மம் செய்து அனைவரும், அவருடைய வாழ்வின் ஒளியை, உள்ளத்தின் பெரும் பகுதியை, தர்மாம்பாளை - பறித்துவிட்டனரே? மனநோயுற்றல்லவா தர்மாம்பாள் அத்தனை சீக்கிரம் அவரைப் பிரிந்தாள்?

இவ்வாறு கூறித் திருப்தியுறும் எண்ணம் மட்டும் சர்மாவின் தூய்மையான உள்ளத்திலே எழவேயில்லை.

**********

(சுதேசமித்திரன், அக்டோபர் 22, 1950)